எல்லோருக்கும் எப்போதும் கல்வி


தமிழியல் மற்றும் பண்பாட்டுப் புலம்

**தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்**

577, அண்ணா சாலை, சைதாப்பேட்டை, சென்னை-600 015


# "தமிழாய்வு நெறிமுறைகளும் புதிய ஆய்வுக் களங்களும்"

## தேசியப் பயிலரங்கு

**நாள்: செப்டம்பர்-26,27, 2019**

## அறிவிப்பும்அழைப்பும்

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் தமிழியல் மற்றும் பண்பாட்டுப் புலம் கடந்த 15 ஆண்டுகளில் நடுவண் மற்றும் மாநில அரசு நிறுவனங்களுடன் இணைந்து தமிழியல் புலம் சார்ந்து 30க்கும் மேற்பட்ட பயிலரங்குகளையும் கருத்தரங்குகளையும் நடத்தியுள்ளது. தற்போது தமிழியலில் இளங்கலை, முதுகலை, பட்டயம் என ஏழு படிப்புகளை வழங்கி வருகிறது. தமிழியல் ஆய்விலும் தனது தனித்த கவனத்தை செலுத்தி வருகிறது. பல்கலைக்கழக நிதிநல்கை குழுவின் அங்கீகாரத்தோடும், தமிழ்நாடு அரசின் அனுமதியோடும் முழுநேர மற்றும் பகுதி நேர முறையில் ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வுப் படிப்புகளை வழங்கி வருவதோடு, இளம் ஆய்வாளர்களுக்கு பயனளித்திடும் வகையில் தமிழிழாராய்ச்சி நெறிமுறைகள் என்னும் முதுகலைப் பட்டயப் படிப்பினையும் வழங்கி வருகிறது. இதன் தொடர்ச்சியாக தமிழியலில் ஆய்வினை மேற்கொள்ள விரும்புகிறவர்களுக்கும், ஏற்கெனவே ஆராய்ச்சி செய்து வருபவர்களுக்கும் தமிழ் ஆய்வு குறித்தும், தமிழியலில் உருவாகி வரும் புதிய ஆய்வுக் களங்கள் குறித்தும் ஒரு சரியான வழிகாட்டுதலை வழங்கிடும் வகையில் **"தமிழாய்வு நெறிமுறைகளும் புதிய ஆய்வுக் களங்களும்"** என்னும் பொருளில் இரண்டு நாள் பயிலரங்கினை எதிர்வரும் செப்டம்பர் மாதம் 26,27 ஆகிய நாட்களில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பயிலரங்கில் தொல்காப்பியம் முதல் அண்மை காலம் வரை தமிழில் உருப்பெற்று வரும் இலக்கிய, இலக்கணங்கள் குறித்தும், அவற்றோடு தொடர்புடைய துறைகள் குறித்தும் ஆழமாக விவாதிக்கப்படுவதோடு, தமிழியல் ஆய்வுக் களங்கள் குறித்தும், தமிழாய்வு நெறிமுறைகள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்படும். குறிப்பாக தமிழியல் ஆய்வில் முன்னோடியாகத் திகழும் தமிழகத்தின் மூத்த பேராசிரியர்கள், ஆயவறிஞர்கள் ஆகியோர் பயிலரங்கில் கலந்துகொள்ளும் இளம் ஆய்வாளர்களுக்கு தமிழியல் ஆய்வு குறித்தும், தமிழாய்வு நெறிமுறைகள் குறித்தும் ஆழமாக விவரிப்பதோடு, பங்கேற்பாளர்கள் ஆய்வுத் தலைப்புகள் தேர்ந்தெடுப்பது முதல் ஆய்வேட்டினை சிறந்த முறையில் உருவாக்குவது வரையான அனைத்து படிநிலைகள் குறித்தும் விவாதிக்கப்படும்.

- தமிழாராய்ச்சி நெறிமுறைகள்
- தமிழ் ஆராய்ச்சி அன்றும் இன்றும்
- இலக்கிய ஆய்வுகள்
- இலக்கண ஆய்வுகள்
- பண்பாட்டு ஆய்வுகள்
- நாட்டுப்புற இலக்கிய ஆய்வுகள்
- தமிழாய்வும் நவீன இலக்கியக் கோட்பாடுகளும்
- கணினி தமிழ்/மொழியியல் ஆய்வுகள்
- கல்வி நிறுவனங்களுக்கு வெளியே நிகழ்த்தப்பட்ட ஆய்வுகள்
- தமிழியலும் இதழியலும்
- நூலகங்களும் தகவல் திரட்டும் முறைகளும்

- ❖ எண்ம நூலகங்கள்

இப்பயிலரங்கு சமகாலத்தில் தமிழியல் சார்ந்து ஆய்வுகளை மேற்கொண்டு வரும் அல்லது மேற்கொள்ள விரும்பும் இளம் ஆய்வாளர்களின் ஆய்வு வேட்கைக்கு உத்வேகம் அளித்திடும் வகையில் அமையும். ஆகையால் தமிழியல் துறைசார்ந்த முதுகலை மாணவர்கள், ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வாளர்கள், முனைவர் பட்ட ஆய்வாளர்கள்,ஆசிரியர்கள், தமிழாய்வில் ஆர்வமும் ஈடுபாடும் மிக்க துறையிடை ஆய்வு மேற்கொள்ள விரும்பும் பிற துறைகள் சார்ந்த ஆய்வாளர்களும் இப்பயிலரங்கில் கலந்துகொண்டு பயன்பெற வேண்டுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**பயிலரங்கில் பங்கேற்பதற்கான பதிவுக் கட்டணம் ரூ.250/-(ரூபாய் இருநூற்றி ஐம்பது மட்டும்)**

பதிவுக் கட்டணத்தினை பயிலரங்கு தொடங்கும் நாள் அன்று சென்னையில் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில் நேரில் பணமாகச் செலுத்தி பற்றுச் சீட்டு பெற்றுக்கொள்ள வேண்டும். பயிலரங்கு நடைபெறும் இரண்டு நாட்களுக்கும் பங்கேற்பாளர்களுக்கு காலை மற்றும் மாலை தேநீர்,சிற்றுண்டி, மதிய உணவு, எழுது பொருள்கள் உள்ளிட்டவை வழங்கப்படும். தங்குமிட வசதியினை பங்கேற்பாளர்கள் தங்கள் சொந்த செலவிலேயே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். இரண்டு நாள் பயிலரங்கில் முழுமையாகப் பங்கேற்க விருப்பம் உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

**பதிவு செய்வதற்கான கடைசி நாள்: 20.09.2019**

**புரவலர்**

**பேராசிரியர் முனைவர் கோ. பார்த்தசாரதி**
துணைவேந்தர்
தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்
சென்னை-15

**ஆலோசகர்**

**பேராசிரியர் முனைவர் பூ. தியாகராஜன்**
பதிவாளர்(பொ.)
தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்
சென்னை-15

**பயிலரங்க தலைவர்**

**முனைவர் சு. பாலசுப்பிரமணியன்**
பேராசிரியர்-தலைவர்
தமிழியல் மற்றும் பண்பாட்டுப் புலம்
தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்
சென்னை- 600015

**பயிலரங்க ஒருங்கிணைப்பாளர்கள் :**

**முனைவர் மு. வையாபுரி**
**முனைவர் சு. அரங்கநாதன்**
உதவிப் பேராசிரியர்கள்
தமிழியல் மற்றும் பண்பாட்டுப் புலம்
தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்
சென்னை- 600015

**தொடர்பு எண்கள்: 9444603024, 9894621706, 044-24306626.**
**மின்னஞ்சல்: tamilresearchsotcs@gmail.com**

## தமிழியல் மற்றும் பண்பாட்டுப் புலம்
## தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்
## சென்னை-600 015.

**தமிழாய்வு நெறிமுறைகளும் புதிய ஆய்வுக் களங்களும்**

**பயிலரங்கு**

**<u>பதிவுப் படிவம்</u>**

பெயர் : ------------------------------------------------------------

கல்வித் தகுதி : ------------------------------------------------------------

பாலினம் : ------------------------------------------------------------

பணிபுரியும்/பயிலும் நிறுவன முகவரி : ------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------

தொடர்பு முகவரி : ------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------

அலைபேசி எண் :

மின்னஞ்சல் முகவரி :

ஆய்வுத் தலைப்பு :

நெறியாளரின் பெயர் & பணியாற்றும்
நிறுவன முகவரி :------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------

பயிலரங்கில் முழுமையாகப் பங்கேற்க விரும்புகிறேன்.

நாள்: கையொப்பம்

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**பேராசிரியர் & தலைவர்**
**தமிழியல் மற்றும் பண்பாட்டுப் புலம்**
**தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்**
**577, அண்ணா சாலை, சைதாப்பேட்டை**
**சென்னை-600 015.**

**மின்னஞ்சல்: tamilresearchsotcs@gmail.com**